BRAMPTON Service and Information Update

**மார்ச் 1, 2021 முதல் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவைகளில் மாற்றங்கள்**

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 18, 2021) – நமது பேருந்து போக்குவரத்து கட்டமைப்பானது நகர மக்கள் நகரம் முழுக்கவும் வந்து செல்வதை உறுதி செய்வதற்காக, மார்ச் 1, 2021 முதல் பேருந்து போக்குவரத்து வழித்தட கால அட்டவணை பின்வருமாறு சீரமைக்கப்படுகிறது; இது அடுத்த அறிவுப்பு வரும் வரை அமலில் இருக்கும்:

- **2 மெயின்** – வாரநாட்கள், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை அட்டவணைகள்
- **6 ஜேம்ஸ் பாட்டர்** – வாரநாட்கள், மற்றும் சனிக்கிழமை அட்டவணைகள்
- **11 ஸ்டீலெஸ்**– வாரநாள் அட்டவணைகள்
- **12 கரெனோபில்** – வாரநாள் அட்டவணைகள்
- **15/15A ப்ரமீலியா** – வாரநாள் அட்டவணைகள்
- **16 சவுத் கேட்** – வாரநாள் அட்டவணைகள்
- **24 வான் கிர்க்** வாரநாள் அட்டவணைகள்
- **25 ஈடென்ப்ரூக்** – வாரநாள் அட்டவணைகள்
- **29/29A வில்லியம்ஸ்** – வாரநாட்கள், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை அட்டவணைகள்

பயணம் செய்யும் முன்பாக வழித்தட அட்டவணைகளைச் சரிபார்க்கவும். ப்ரமீலியா, ப்ராம்ப்ட்டன் கேட்வே மற்றும் டவுண்டவுன் பேருந்து முனைய கட்டிடங்கள் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை திறந்திருக்கும். ட்ரினிட்டி காமன் பேருந்து முனையம் மூடப்பட்டிருக்கும். பேருந்து முனையங்களில் கிடைக்கும் வாடிக்கையாளர் சேவைகள் பற்றிய அறிய, வருகை தரவும்: www.bramptontransit.com. சமுதாயத்தைப் பாதுகாப்பதற்கான நமது பாகத்தை நாம் அனைவரும் செய்வது அவசியமாகும். நினைவில் கொள்ளவும்:

- பேருந்து முனையங்கள், மற்றும் பேருந்துகளில் இருக்கும்போது முகத்திரைகள் அல்லது மருத்துவம் அல்லாத முக கவசங்கள் அணிவது கட்டாயமாகும் – மருத்துவநிலைமைகள் உள்ளிட்ட விதிவிலக்குகளும் உள்ளன. உங்கள் மூக்கு, வாய் மற்றும் தாடையை முகத்திரைகள் என்னேரமும் மறைத்தபடி இருப்பது அவசியம்.
- முகக் கவசம் அணிந்திருக்கும்போதும் கூட, பேருந்து முனையங்கள், மற்றும் பேருந்து நிறுத்தங்களில் உடல்ரீதியான இடைவெளி விடுவதைத் தொடர்ந்து பேணி வரவும்
- பயணம் செய்யும்போது கை சுத்திகரிப்பி அல்லது துடைப்பான்கள் போன்ற உங்கள் சொந்த கிருமிநாசினியை கைவசம் வைத்திருக்கவும் மற்றும் உங்கள் கைகளை அடிக்கடி கழுவவும்.

  உங்களுக்கு உடல் நலமில்லாது இருந்தால், பேருந்தில் பயணம் செய்வதைத் தவிர்க்கவும். அருகாமையில் இருக்கின்ற கோவிட்-19 மதிப்பீட்டு மையத்தில் சோதனை செய்துகொண்டு, பொது சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**COVID-19 பாதுகாப்பு நடவடிக்கைகள்**

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத் தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம் பேருந்துகள் 24 மணிக்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றன. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும்.

பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பின் வழிகாட்டுதலின் பேரில், பேருந்து பயணிகள், பேருந்துகளிலும் மற்றும் பேருந்து முனையங்களிலும் இருக்கும்போது, மருத்துவம் அல்லாத முகக் கவசம் அணிய நினைவூட்டப்படுகிறார்கள். ஆபத்துக்களைக் கண்காணிப்பதற்காக, பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பு மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர அவசரகால மேலாண்மை அலுவலகம் ஆகிய தனது கூட்டு அமைப்புகளுடன் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நெருங்கி பணியாற்றி வருகிறது.

வழக்கப்படியான புதுத் தகவல்களுக்கு www.brampton.ca/covid19 எனும் வலைத்தளத்திற்கு வருகை புரியவும் மற்றும்சேவைகள் பற்றிய புதிய தகவல்களுக்கு www.bramptontransit.com க்கு வருகை தரவும் அல்லது @bramptontransit ஐ டுவிட்டரில் பின்பற்றவும். கேள்விகள் இருப்பின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தின் தொடர்பு மையத்தை 905.874.2999.இல் தொடர்பு கொள்ளவும்.

-30-

**ஊடக தொடர்புகள்**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca